# தினசரி சந்தை நிலவரப் பணி - ஒரு வாழ்க்கையின் ஒளியேற்றும் பணி:



ஏ.எம்.லத்தீப்,
(இஞ்சி, உருளை மற்றும்
மொத்த காய்கறி வியாபாரி)
கோயமுத்தூர் இஞ்சி வியாபார நிறுவனம் (CGT)
கடை எண்: 54, மேட்டுப்பாளையம் சாலை,
கோயமுத்தூர் - 641043
தொலைபேசி: 0422-2442280, அலைபேசி: 9443373660.

---

என் பெயர் ஏ.எம்.லத்தீப், நான் ஒரு சிறிய இஞ்சி வியாபாரியாக 15 வருடங்களுக்கு முன்னால் கோயமுத்தூர் சந்தையில் வியாபாரத்தை தொடங்கி இதை நானும் என்னுடைய தந்தை, தாத்தா போன்றோர் தலைமுறை தலைமுறையாக வியாபாரம் செய்து வருகின்றோம். நடுத்தரமான வியாபாரியான எனக்கு நிறைய பணத்தை முதலீடு செய்து வியாபாரம் செய்ய முடியவில்லை.

இது எனக்கு மிகவும் இடர் பாடுகளை கொண்டது என்றாலும்,வருத்தத்தைக் கொடுத்தாலும் இந்த வியாபாரம் ஒன்றே தெரியும் என்பதனால் பாரம்பரியமான குடும்ப வியாபாரமாக இருப்பதால் இதில் இருந்து விலக முடியவில்லை. விலை ஏற்ற இறக்கங்களை, சந்தை தகவல்கள் மற்றும் தேவை மற்றும் வரவுகள் பற்றிய விபரங்களை அறிய இயலாததால் என்னால் யூகிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. லாபமானாலும் சரி, நஷ்டமானாலும் சரி ஒரு யூகத்தின் அடிப்படியிலேயே விலையை நிர்ணயித்து வந்தோம். ஆனால் இதனால் எனக்கு லாபத்தை விட நஷ்டத்தையே அதிகமாக சந்தித்து வந்தேன். இதனால் என் வாழ்க்கைத் தரம் எவ்வளவோ முயன்றும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்து வந்தது.

அதன் பிறகு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் (C-DAC) இணைந்து தினசரி சந்தை நிலவரங்களை (DMI) தொகுத்து வழங்குவதை கோயமுத்தூர் சந்தை ஆய்வாளர் மூலம் அறிந்தேன்.

இந்த நிலவரங்களை www.indg என்ற இணையதளம் மூலம் வழங்குவதையும், மேலும் இலவச தகவல்களை அவரவர் அலைபேசி மூலமும் எந்த

வித கட்டணமும் இன்றி தினசரி வழங்குவதை அறிந்தேன். தொடக்கத்தில் இது வெறும் பெரிய வியாபாரிகளுக்கு மட்டுமே என்று தவறாக நினைத்து இருந்தேன். ஆனால், இதைத் தொடர்ந்து கவனித்து வந்து அந்த நிலவரங்களை மையமாக வைத்து விலையை நிர்ணயம் செய்ததில் எனக்கு மட்டுமன்றி விவசாயிகளுக்கும் நஷ்டம் வராமல் இருப்பதை அறிந்தேன். இதன் பயனாக நான் கோயமுத்தூர் சந்தை மட்டுமல்லாது பெங்களூர், கொச்சின் சந்தை வியாபாரிகளிடத்தும் தகவல் தொடர்பு ஏற்பட்டது. இது அனைத்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் சந்தை நிலவரங்களின் சேவைகளின் அடிப்படையிலேயே பெற முடிந்தது.

தினசரி சந்தைகளின் விலை நிலவரங்கள் மற்றும் வேறு தகவல்கள் மட்டுமல்லாது தென்னிந்தியாவில் உள்ள சந்தை வியாபாரிகளின் விபரங்களையும் பெற முடிகிறது. மேலும் இதன் மூலமாக பெங்களூர், கொச்சின் ஆகிய சந்தை வியாபாரிகளோடு நிறந்தரத் தொடர்பு வைத்துக் கொள்ள முடிகிறது வரத்தைப்பொறுத்து இஞ்சியின் விலை மாறும். மேலும் இங்கு இஞ்சி விலை வீழ்ச்சியடையும் போது கிராக்கி உள்ள சந்தைகளுக்கு அனுப்பி பயனடைந்து வருகிறேன். ஆரம்ப காலங்களில் இஞ்சி வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டு வந்த நான் இப்பொழுது சேணை, உருளை போன்ற காய்கறிகளையும் விற்பனை செய்து பயனடைந்து வருகிறேன்.

உண்மையாகக் கூறினால், தினசரி சந்தை நிலவரம் என் வாழ்வில் ஒளியேற்றியது மட்டுமல்லாது எனது வாழ்க்கைத் தரத்தையும் மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இப்பொழுது இந்த சந்தையில் நான் ஒரு மதிப்பு மிகுந்த வியாபரிக்காக பார்க்கப்படுவதோடு எனது வியாபரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் உருவாகி உள்ளன.

என் மனப்பூர்வமான நன்றியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும், தினசரி சந்தை நிலவரத்திற்கும் (DMI) தெரிவித்துக் கொள்கிறேன்.